ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

=================================================================================

# புறநானூற்றில் சைவசமயக்கூறுகள்

*செ. தாமரைச்செல்வி*
*முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் - 21112014022022, ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தமிழாய்வு மையம், தூத்துக்குடி-628002. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அங்கீகாரம் பெற்றது அபிஷேகப்பட்டி, திருநெல்வேலி-12, தமிழ்நாடு, இந்தியா.*

*முனைவர் ச. மல்லிகா*
*நெறியாளர் & இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழாய்வுமையம், ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி-628002, தமிழ்நாடு, இந்தியா*

=================================================================================

*ஆய்வுச் சுருக்கம்:-*

*சங்க இலக்கியங்கள் அகம் புறம் என்னும் இருவகை வாழ்வையும் எடுத்துரைக்கின்றன. மனிதனைத் தவறான வழியில் செல்லவிடாமல், தடுத்து, மனத்தைத் தூய்மைப்படுத்துகின்ற ஆழ்ந்த சிந்தனைகளும் நுண்ணுணர்வுகளும் கொண்ட ஞானியரின் அறிவார்ந்த முடிவுகள் சமயம் என்று கருதப்பட்டுள்ளது. அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்களில் கடவுள்வாழ்த்துப் பாடல்கள் சைவ சமய கடவுளான சிவனை வாழ்த்துவதாக அமைந்துள்ளன. காவிரிப்பூம்பட்டினம், மதுரை, வஞ்சி முதலிய பெருநகரங்களில் இக்கடவுளர்க்குரிய கோயில்கள் இருந்தன பற்றிய கருத்துக்கள் காணப்படுகின்றன. கடவுள் நம்பிக்கை என்பது வாழ்க்கையின் ஒழுகலாறுகளைத் தனக்குள் அடக்கிக் கொண்டிருப்பது புறநானூற்றில் கடவுள் தொடர்புடைய நம்பிக்கைகளும் சிந்தனைகளும் காணப்படுகின்றன. அந்நூலில் பலசமயங்கள் பற்றிய பாடல்கள் காணப்பட்டாலும் சிவனைப் பற்றிய பாடல்கள் அதிகம் காணப்படுகின்றன. அப்பாடல் ஒவ்வொன்றும் கடவுளோடு மன்னனை ஒப்பிட்டுப் பார்க்கும் தன்மையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. சைவ சமயத்தின் முழுமுதல் கடவுளான சிவபெருமானைப் பற்றிய சைவசமயக் கருத்துக்கள் புறநானூற்றில் ஆழப்பொதிந்துள்ளன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

*முன்னுரை:*

*வாழ்ந்து சிறந்த தமிழர்களின் பெருமையினைப் பாடுபொருளாகக் கொண்டது புறநானூறு. களிறு எறிந்து பெயரும் காளையர்களின் வீர வரலாற்றை எடுத்துரைக்கும் பெருமையினையுடையது. வீரம், புகழ், கொடை, நட்பு முதலியன பற்றிக்கூறும் நூலாகயிருப்பினும் சமயநெறி சார்ந்த கருத்துக்களைக் கூறிச் செல்கிறது. மனித மனத்தில் தோன்றிய அச்சம் குற்றஉணர்வு போன்ற மனவியல்புப் பண்புகளின் பரிணாம வளர்ச்சியே வழிபாட்டு நெறிக்கு வித்திட்டது. காலங்காலமாக மக்கள் மனதில் வேரூன்றியுள்ள சமய நம்பிக்கையும் கோட்பாடும் ஆழ்ந்து ஆராயப்பட வேண்டியது. புறநானூற்றில் சைவ சமய கருத்துக்கள் மிகுதியாக இடம்பெற்றுள்ளன என்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.*

*ஆய்வு அணுகுமுறை:*

*மனிதனுடைய அச்சவுணர்வு மற்றும் குற்றவுணர்விலிருந்து விடுவிக்கப்படுவதற்காக சமயம் தோன்றி இருக்க வேண்டும். இவ்வாய்வில் புறநானூற்றில் காணலாகும் சைவசமயக் கருத்துக்களை ஆராய்வதால் சமயம் சார்ந்த சமுதாய அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. புறநானூற்றில் சைவசமயக் கடவுளான சிவபெருமான், முருகன் பற்றிய செய்திகளைத்*

*தரவுகளின் அடிப்படையில் தொகுத்தும்,பகுத்தும் ஆய்வு மேற்கொள்ளப்படுவதால் பகுப்பாய்வு அணுகுமுறையும், விளக்கமுறை அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

*சமயம் :*

*சமயம் என்றால் மனிதரைச் சமைப்பது அல்லது பக்குவப்படுத்துவது எனப் பொருள்படுகிறது.இயற்கையை வழிபட்ட மக்கள் சிறிது சிறிதாக நடுகல் வழிபாட்டைத் தொடர்ந்து உருவம் கொடுத்து சமயவழிபாட்டில் ஈ.டுபட்டனர் .சமயம் என்பது பக்குவப்படுத்தும் கொள்கைநெறி எனவும் பொருள் கொள்வர். இதற்கு மதம் என்ற பெயரும் உண்டென்பர் சான்றோர். மதி+அம் =மதம். கடவுளை மதித்தல், கருதுதல் என்றும் விளக்கம் தருவர்.சமயம் என்பது சாத்திரமல்ல அவை வாழுகின்ற வாழ்க்கைநெறியாகும், இப்படித்தான் வாழவேண்டுமென்று மனிதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் கருவியாகச் சமயங்கள் இருந்திருக்கின்னை.*

*சமயம் பற்றிச் சான்றோர் கருத்துக்கள்:*

*சமுதாயத்தில் இப்படித்கான் வாழ வேண்டுமென்ற உணர்வு எப்போது தோன்றுகின்றதோ அக்காலகட்டத்தைச் சமயநெறியின் தொடக்க நிலையாகக் கருதுவர். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பும் மக்கள் மனதில் சமய உணர்வு இருந்ததைக் கடவுள் தெய்வம் என்ற சொற்களைக் கையாள்வதிலிருந்து அறியமுடிகிறது. சமயம் அறவழிபட்டச் சிந்தனை தோன்றுவதற்கு அடித்தளமாக அமைகின்றது. அல்லவை தேய்ந்து அறம் பெருகக் கடவுள் நம்பிக்கை காரணமாகிறது. தமிழ்க்களஞ்சியம் “மரபு வழிப்பட்ட நம்பிக்கைகள், வாழ்க்கைச்சடங்குகள், இறப்புப் பற்றிய எண்ணங்கள், நல்லன தீயன என்னும் பாகுபாடுகள், வாழ்வில் பற்று, பற்றுவிடுதல் ஆகிய உணர்வுகள் இவை அனைத்தும் உள்ளடக்கியது சமயம்” [1] (தமிழ் கலைக் களஞ்சியம் (தொகுதி 4) என்று விளக்கம் தருகிறது.*

*“சமயம் என்பது மனிதன், தன்னுடைய ஆழ்ந்த அனுபவங்களால் அடைந்த மிக உயர்ந்த நிலை; பல்வேறுபட்ட நிலைகளை எதிரொலிக்கும் மிக ஆழமான ஒரு பிரிவு; கோடிக்கணக்கான மனங்களின் எண்ணங்களும் கனவுகளும் மிளிரும் ஓர் இடம்” [2] என்று இராதாகிருட்டினன் குறிப்பிடுகிறார்.*

*சமயம் குறித்து பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டாலும் வாழ்க்கைக்குத் துணையாகத் துன்பங்கள் நேரும்போது காக்கும் அரணாகக் கடவுள் வருவார் என்ற பொதுவான தன்மையை எடுத்துரைக்கின்றன.*

*புறநானூற்றில் சைவம், வைணவம்,சமணம்,பௌத்தம் போன்ற பல்வேறு சமயங்கள் இருந்தபோதிலும் சைவசமயக் கடவுளான சிவபெருமான், முருகன் போன்ற கடவுள்கள் மன்னனோடு ஒப்பிட்டுக் கூறப்பட்ட தன்மையைக் காணமுடிகின்றது.*

*சைவசமயம்:*

*இயற்கையை வழிபட்ட மக்கள் நாளடைவில் உருவம் கொடுத்து சமய வழிபாட்டிற்கு உயிர் கொடுத்தனர். பெயர்களைச் சூட்டி இசைபாடினர். நம்பிக்கைகளையும், சடங்குகளையும் பின்பற்றிப் பிற சமயக் கொள்கைகளை எதிர்க்கவும் முற்பட்டனர்.*

*ஆரியர் வருகைக்கு முற்பட்ட சிந்துவெளி நாகரிகத்தில் சிவவழிபாடு நிலைபெற்றிருந்தது எனத் தொல்காப்பிய ஆராய்ச்சியாளர்கள் நிறுவியுள்ளனர். ஆரியர்கள் தம் பழைய மறையில் சிவபெருமானை இழிவாகக் குறிப்பிட்டுள்ளதால் சிவன் திராவிடத் தெய்வமே என அறியலாம் என்கிறார் வேங்கடசாமி.*

*தொல்காப்பியத்தில் மாயோன், சேயோன் போன்ற நில தெய்வங்களை மட்டும் எடுத்துக்காட்டுகிறார் தொல்காப்பியர். சிவன் என்னும் சொல் காணப்படாமல் சிவனின் அடையாளங்கள் மட்டும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. புறநானூற்றில் கடவுள் வாழ்த்துப் பாடலாக சிவனைப் பற்றிய பாடல் இடம்பெற்றுள்ளது . முதுமுதல்வன், முக்கண்ணன், கறைமிடற்று அண்ணல், நீலமணிமிடற்று ஒருவன் என்றெல்லாம் அப்பாடலில் சிவன் சிறப்பிக்கப்பெறுகிறார்,*

சிவபெருமான் :

நானிலங்களுக்கும் தனித்தனியாகத் தெய்வங்களை வகுத்துக் கூறிய தொல்காப்பியர், மும்மூர்த்திகளுள் ஒருவரான சிவபெருமானைப் பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. புறநானூற்றில் சிவபெருமானைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. கடவுள் வாழ்த்தில் சிவபெருமான் உலகத்து உயிர்களுக்கெல்லாம் பாதுகாப்பைத் தருபவன். நீர் வற்றுதல் இல்லாத கமண்டலத்தை உடையவன். நீண்ட சடையைக் கொண்டவன். சிறந்த தவத்தை உடையவன் என்று போற்றுகின்றார் பாரதம் பாடிய பெருந்தேவனார். அத்தகைய இறைவனின் தோற்றத்தினை,

"கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பின் தாருங் கொன்றை
ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வே றென்ப,
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை" (கடவுள்வாழ்த்து)

என்று புலவர் எல்லா உயிர்கட்கும் காவலாக இருக்கின்ற சிவனின் அடையாளங்களைக் குறிப்பிடுகிறார். சிவபெருமானின் தலையிலுள்ள மாலையும் மார்பில் அணிந்துள்ள மாலையும் கொன்றை மலர்களால் ஆனது. அவன் ஏறிச் செல்லுகின்ற வாகனம் வெண்ணிறக் காளை என்றும், நீலநிற கழுத்தை உடையவனான சிவன் என்றும் இறைவனின் தோற்றச் சிறப்பினை வியந்து போற்றி வழிபடுகின்றார்.

திருப்பாற்கடலில் தோன்றிய நஞ்சை அமுதாக உண்டதால் கண்டம் கறுத்தவன் சிவபெருமான்

"கறைமிடற் றண்ணல்" என்றும் (புறம்:55)
"மணிமிடற் றோனும்" என்றும் (புறம்:56)
"நீல மணிமிடற் றொருவன் போல" (புறம்:91)

என்றும் புறநானூறு நீலமணிபோன்று கரிய திருமிடற்றினை உடையவன் சிவபெருமான் என்று அவனின் கழுத்தை போற்றுகின்றது. இதனை

"மணிமிடற்று எண்கையாய் !" [3] (கலித்தொகை :1)

என்று கலித்தொகை நஞ்சுமணியைத் தொண்டைக்குள் அடக்கிக் கொண்டவனென்று புகழ்கின்றது,

"ஏற்றுவல னுயரிய வெரிமரு ளவிர்சடை
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்" (புறம்:56)

என்று நக்கீரர் சிவபெருமான் இடபக்கொடியும் எரிநெருப்பு போலும் செஞ்சடையுமுடைய மழுவேந்திய நீல கண்டன் என்று இறைவனின் தோற்றத்தை வருணிக்கிறார்.

நீலமணி கழுத்துடைய சிவபெருமான் பிறைநுதலில் கண்ணினை உடையவர். அத்தகைய சிறப்பினைப் பெற்றக் கண் அவரின் முகத்திலுள்ள இருகண்களை விட மேம்பட்டு விளங்குவது போன்று பாண்டியன் சினம் கொண்டு பகைவர்களை அழிப்பதில் சேர, சோழ மன்னர்களை விடச் சிறந்து விளங்குகின்றான் என்பதை,

"கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கு மொருகண் போல
வேந்துமேம் பட்ட பூந்தார் மாற" (புறம்: 55:4-6)

என்று மருதனிளநாகனார் கறை மிடற்று அண்ணலை போற்றுகின்றார், 'சிவனொடொக்கும் தெய்வம் தேடினுமில்லை' எனச் சிவபெருமானைத் திருமந்திரம் சிறப்பிக்கின்றது. சிவனுக்குக் கோயில் இருந்ததை,

"முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே" (புறம்:6)

என்று காரிகிழார் முனிவரால் பரவப்படும் மூன்று திருநயனத்தையுடைய இறைவனின் கோயிலை வலம் வருதலைக் குறிப்பிடுகிறார்.

"கண் அவனைக் காண்க இருகாது அவனைக் கேட்க வாய்ப்
பண் அவனைப் பாடப் பதம் சூழ்க – எண் இறந்த
நெய் ஒத்து நின்றானை நீல மிடற்றானைஎன்
கை ஒத்து நேர் கூப்புக" [4] – எனப் புறப்பொருள் வெண்பாமாலையில் சிவனைப் போற்றுகின்றனர் ஐயனாரிதனார்.

*சிவபெருமானும் வடமொழிப்புராணங்களும்:*

*வேதங்கள் சிவபெருமானின் நாவிலிருந்து தோன்றியது என்பதை,*

*"நன்றாய்ந்த நீணிமிர்சடை*
*முதுமுதல்வன் வாய்போகா" (புறம் 166 )*

*என்று புறநானூறு நீண்ட சடையினையுடைய முழு முதல் பொருளான இறைவனின் வாக்கிலிருந்து தோன்றிய அறமானது முதுமுதல்வனின் வாக்கை விட்டுப் போகாது என்று போற்றியுரைக்கின்றது.*

*"பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி*
*நீல மணிமிடற் றொருவன் போல*
*மன்னுக பெரும நீயே தொன்னிலை" (புறம்:91)*

*என வரும் பாடலில் ஔவையார் பால்போன்ற வெள்ளிப் பிறைநிலா சூடிய திருமுடியை உடையவன் சிவபெருமான். ஆலகால விடத்தை உண்டும் அழியாது நிலைபெற்று விளங்கும் நீலமணிமிடற்று ஒருவனாகிய, சிவபெருமானைப் போன்று அதியமான் நெடுமான் அஞ்சியும் நீண்ட காலம் வாழ்தல் வேண்டும் என்று வாழ்த்துகிறார்.*

*சிவபெருமானின் வீரச்செயல்களில் முப்புரங்களை எரித்ததைப் புறநானூறு கூறுகின்றது. ஓங்கி உயர்ந்த பெருமலையாகிய மேருவை வில்லாக்கி, வாசுகி என்ற பாம்பை நாணாக அமைத்து, ஓரம்பைத் தொடுத்து அவுணர்களின் முப்புரங்களைத் தீக்கிரையாக்கித் தேவர்களுக்கு வெற்றியைத் தேடித் தந்த நீலமணிக் கழுத்துடைய இறைவன் சிவபெருமான் என்பதை,*

*"ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ*
*ஒருகணை கொண்டு மூவெயி லுடற்றிப்*
*பெருவிற லமரர்க்கு வென்றி தந்த*
*கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்" (புறம் :55)*

*என்று புலவர், சிவபெருமான் முப்புரம் எரித்ததைக் குறிப்பிடுகிறார். இதனை*

*"தொடங்கற்கண் தோன்றிய முதியவன் முதலாக*
*அடங்காதார் மிடல் சாய, அமரர் வந்து இரத்தலின்*
*மடங்கல்போல், சினைஇ, மாயம்செய் அவுணரைக்*
*கடந்து அடு முன்பொடு, முக்கண்ணான் மூஎயிலும்*
*உடன்றக்கால், முகம்போல் ஒண்கதிர் தெறுலின்"[5] (கலித்தொகை 2:1-5)*

*அவுணர் என்னும் அரக்கர்களின் வலிமையை அழிக்க முக்கண்சிவன் திரிபுரம் என்னும் மூன்று கோட்டைகளை அழித்தான். அப்போது அக்கோட்டைகள் மழை மேகத்தால் இடிபட்டு மலை பிளப்பது போல் பிளந்து அழிந்தன என்கிறது கலித்தொகை. புறநானூற்றிலும், கலித்தொகை, பரிபாடல் போன்ற தொகை நூல்களிலும் இப்புராணக்கதைகள் காணப்படுகின்றன. இத்தகைய திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் முதல் சங்கத்தில் இடம் பெற்றுள்ளார் என்கிறது இறையனார் அகப்பொருள்.*

*முருகன்:-*

*குறிஞ்சி நில மக்கள் வழிபடும் தெய்வமாக முருகன் கருதப்படுகிறான். "முருகன் என்னும் சொல் முருகு என்னும் சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது. 'முருகு' என்னும் சொல்லுக்கு அழகு, இளமை, செல்வம், மணம், வேள்வி என்னும் பல்வேறு பொருள்கள் கூறப்படுகின்றன."[5]*

*புறநானூறு முருகப்பெருமானின் தோற்றப்பொலிவினையும், அருட்செயல்களையும், ஆற்றல் திறனையும் அழகுதமிழில் கூறுகிறது. முருகன் முருகு என்னும் பண்புச்சொல்லால் குறிக்கப்படுவதை,*

*"முருகொத் தீயே" (புறம் : 56)*
*"முருகற் சீற்ற" (புறம்:16)*

*என்று புறநானூறு கூறுகிறது. இதனை,*

*"முருகு ஆற்றுப் படுத்த"[7] (அகம்:22)*
*"இயல் முருகு ஒப்பினை"[8] (அகம் :118)*

*என்று அகநானூறு முருகனை முருகு என்னும்சொல்லால் குறிப்பிடுவதைக் காணமுடிகிறது. முருகப் பெருமானின் திருக்கோயில் சிறப்பை,*

*“ .......... சாழ்நீர்*
*வெண்டலைப் புணரியலைக்குஞ் செந்திலம்*
*நெடுவே னிலைஇய காமர் வியன் றுறை” (புறம்:55)*

என்று வெள்ளலை வீசும் தாழ்ந்த கடல்சூழ்ந்த செந்தில் பதியில் செவ்வேள் கோயில் கொண்டிருப்பதையும்,

*“அணங்குடை முருகன் கோட்டத்து" (புறம்:299 )*

என்று முருகன் கோயிலையும் புறநானூறு கூறுகிறது.

முருகன் வலிமை மிக்கவன் :-

முருகன் சிவந்த நிறமுடையவன். அவன் மயிலை ஊர்தியாகவும், கொடியாகவும் கொண்டுள்ளான் என்பதை,

*“மணிமயி லுயரிய மாறா வென்றிப்*
*பிணிமுக வூர்தி யொண்செய் யோனுமென்” (புறம்:56)*

என்ற அடிகளில் புறநானூறு குறிப்பிடுகிறது. முருகன் போரிலே சிறந்தவன், சினமும் சீற்றமும் மிக்கவன் எந்நாளும் வெற்றியையே விரும்புபவன் என்று முருகப் பெருமானின் வலிமையையும் புகழையும் புலவர்கள் பல பாடல்களில் பாடி வழிபட்டுள்ளனர் . போரில் சிறந்தவன் என்பதை,

“செருமிகு சேஎய்” (புறம்:14) என்றும் வெற்றியை விரும்புவதால்
“விறல்வெஞ் சேய்” (புறம் :22) என்றும்,
“ செருவெஞ் சேய்" (புறம்:120)

என்றும் புறநானூறு முருகனின் ஆற்றலையும் சீற்றமிகு சினத்தையும் குறிப்பிடுகிறது.

*“கார்நறுங் கடம்பின் பாசிலைத் தெரியற்*
*சூர்நவை முருகன் சுற்றத் தன்னநின்*
*கூர்நல் லம்பிற் கொடுவிற் கூளியர்” (புறம்:23)*

என்று கல்லாடனார் கூறுகிறார். கார் காலத்தில் மலர்ந்து மணம் வீசும் இலையோடு கூடிய நறுமலர் நிறைந்த கடம்ப மாலை அணிந்து சூரனைக் கொன்ற கூர்வேல் ஏந்திய முருகப்பெருமான் உடைய படைவீரர்களைப் போன்ற படைப்பெருக்கத்தினை உடையவன் பாண்டிய மன்னன் என்று முருகனின் படை ஆற்றலுடன் பாண்டிய மன்னனின் படைத்திறத்தினை ஒப்பிட்டுக் கூறுகிறார்.

சேரன் இரும்பொறையும் சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் போரிட, சோழனுக்குத் துணையாக நின்று மலையமான் திருமுடிக்காரி வெற்றி தேடித் தந்தான். சோழன் படை மலையமானால் வென்றோம் என்றும் சேரன் மலையமான் இல்லாதிருந்தால் வென்றிருப்போம் என்று இருதிறத்தாரும் போற்றும் பேராற்றல் உடையவன் தேர்வண் மலையன். இவ்வாறு நண்பரும், பகைவரும் போற்றுதலால், அவன் பகைவரும், பக்தரும் போற்றும் செவ்வேள் குமரனை ஒத்து இருந்தான் என்பதை,

*“ஒருநீ யாயினை பெரும பெருமழைக்*
*கிருக்கை சான்ற வுயர்மலைத்*
*திருத்தகு சேஎய்நிற் பெற்றிசி னோர்க்கே” (புறம்:125)*

என்று பெருஞ்சாத்தனார் தேர்வன் மலையன் என்னும் குறுநில மன்னனின் வெற்றித் திறத்தை முருகனோடு ஒப்பிட்டுப் பாடுகின்றார். இதன் மூலம் வேட்டைச் சமூகத்தின் தெய்வமான முருகன் படிநிலை வளர்ச்சி பெற்று மன்னர்களின் வெற்றிக் கடவுளாகத் திகழ்ந்தான் என்பது புலனாகின்றது.

முடிவுரை:-

தமிழ்ச் சமூக வரலாற்றில் சைவத்தின் பங்கு மிகவும் முக்கியமானது. மனித இனம் தோன்றிய காலம் முதல் சமயம் சார்ந்த இறைச்சிந்தனை இருந்து வந்துள்ளது. மனிதன் வாழ்க்கையில் துன்பங்கள், சிக்கல்கள் ஏற்படும்போது சமயம் தொடர்புடைய இறைவழிபாட்டில் தம்மை இணைத்துக்கொள்ள மனிதமனம் விரும்பியுள்ளது. இயற்கையை வழிபட்ட மனிதன் சங்ககாலத்தில் சமயம் சார்ந்த கோட்பாடுகளை உருவாக்கியுள்ளான். சங்க நூல்களில் சைவ சமயக் கடவுளான சிவனைப் பற்றிய குறிப்புகள் விரிவாக இடம்பெற்றுள்ளன.

ஆனால், சிவன் என்ற பெயர் அங்கே வழங்கப்படவில்லை. சிவனை அடையாளமாகக் காட்டும் தொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நன்றாய்ந்த நீணிமிர்சடை, முதுமுதல்வன் என்ற தொடரினால் முழுமுதற் கடவுள் சிவன் என்பதுதெளிவாகிறது மேலும் காத்தலும் அழித்தலும் சிவபெருமானாலேயே நடைபெறுகின்றன என்பதனால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களைச் செய்கின்றான் என்ற கருத்தை இலக்கியங்கள் குறிப்பால் உணர்த்துகின்றன.


மேற்கோள்கள் :

1.புறநானூறு, ஔவைசு.துரைசாமிப்பிள்ளை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,
சென்னை,முதற்பதிப்பு -1947.

2. தமிழ்க்கலைக் களஞ்சியம்,தொகுதி 4,தமிழ் வளர்ச்சிக் கழகம்,சென்னை, 1953

3. சங்க இலக்கியம்,(எட்டுத்தொகை) தொகுதி -3, ச. வே. சுப்பிரமணியன்,மணிவாசகர் பதிப்பகம், சென்னை,முதற்பதிப்பு -2010.

4. கலித்தொகை,கழக வெளியீடு,சென்னை – 1975.

5. தமிழ் லெக்சிகன் ( 7 தொகுதிகள் ),சென்னை பல்கலைக்கழகம்,சென்னை


********* ********* ********** ********* ********* ********** ********** **********